**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம். நாங்குநேரி**
**முன்னிலை: திருமதி.ச.மஞ்சுளா.பி.ஏ.,எல்.எல்.பி.,**

**மாவட்ட உரிமையியல் நீதிபதி, நாங்குநேரி**
**2026 ம் ஆண்டு மார்ச் மாதம் 6 ம் நாள் வெள்ளிக்கிழமை**
**அசல் வழக்கு எண்.164/2024**

1. பேச்சிமுத்து

2. முத்துலெட்சுமி

3. ஐஸ்வர்யா

(தத்தெடுத்த தந்தையும் காடியனுமான 1 ம் வாதி மூலம்) ..... வாதிகள்

/எதிர்/

1.சுப்பிரமணியன்

2. சகுந்தலா

3. தாசில்தார் அவர்கள்

நான்குநேரி

4. தமிழக அரசு அதன் திருநெல்வேலி

மாவட்ட ஆட்சியர் அலுவலகம் .... பிரதிவாதிகள்

இவ்வழக்கானது 24.02.2026 அன்று இந்நீதிமன்றத்தின் முன்பு இறுதியாக விசாரணைக்கு வந்த போது, வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.P.தங்கேஸ்வரன் அவர்கள் முன்னிலையாகியும், 1, 2 பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் செல்வி.U.தனு.பி.எஸ்சி.,எல்.எல்.பி., அவர்கள் முன்னிலையாகியும், 3, 4 பிரதிவாதிகளுக்கு நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை அனுப்பப்பட்டு, அரசு வழக்கறிஞர் ஆஜராகி எதிர்வழக்குரை தாக்கல் செய்யாத காரணத்தினால் அவர்கள் தரப்பு ஒருதரப்பாக்கப்பட்ட நிலையிலும், இவ்வழக்கில் விசாரிக்கப்பட்ட சாட்சி மற்றும் தாக்கல் செய்யப்பட்டுள்ள சான்றாவணங்களை பரிசீலனை செய்தும், இதுநாள் வரையில் இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து வந்த இவ்வழக்கில் இந்நீதிமன்றம் கீழ்க்கண்டவாறு வழங்கும் :

## தீர்ப்புரை

**1)** தத்தெடுப்பு ஆவணம் (சுவிகார பத்திரம்) படி 3ம் வாதியை 1ம் மற்றும் 2ம் வாதிகளின் தத்தெடுப்பு குழந்தையாக விளம்புகை செய்து பரிகாரம் வழங்கும் படிக்கும் மற்றும் இவ்வழக்கு செலவுத் தொகை கோரியும் வாதிகளால் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2) பிராதின் சுருக்கம் :**

வழக்கு 1ம் பிரதிவாதியும், 2ம் பிரதிவாதியும் கணவன் மனைவி என்றும், மேற்படி தம்பதியருக்கு 2004ல் திருமணம் நடைபெற்று, மேற்படி திருமணத்தின் மூலம் குழந்தைகள் இல்லை என்றும், 1ம் பிரதிவாதி 1ம் வாதியின் உடன் பிறந்த சகோதரர் என்றும், மேற்படி 1ம் பிரதிவாதிக்கும் 2ம் பிரதிவாதிக்கும் ஏற்பட்ட திருமண பந்தத்தின் பயனாக 01.04.2015ம் தேதி இவ்வழக்கின் 3ம் வாதியான மைனர் ஐஸ்வர்யா என்பவர் பிறந்துள்ள நிலையில், மேற்படி வழக்கில் 3ம் வாதி தனது சகோதரர் மகள் என்பதால் குழந்தைகள் இல்லாததை மறந்து மேற்படி 1ம் மற்றும் 2ம் வாதிகள் 3ம் வாதியை நன்கு பாதுகாத்து கவனித்துள்ள நிலையில், 1, 2 வாதிகளுக்கு குழந்தைகள் பிறக்கபோவதில்லை என்ற மனக்கவலையுடன் 1ம் மற்றும் 2ம் பிரதிவாதியிடம் 3ம் வாதியை தத்தெடுக்க கேட்டுக்கொண்டதால், 1, 2 ம் பிரதிவாதிகள் தங்களது 3வது பெண் குழந்தையான செல்வி ஐஸ்வர்யா என்பவரை இவ்வழக்கு 1, 2 வாதிகளுக்கு இந்து மத சடங்கு படியும் இந்து மத சட்டப்படியும் இரு பாட்டிகளுக்கும் சொந்தமான உறவினர்கள் முன்னிலையில் தத்து கொடுத்துள்ளதாகவும், மேற்படி பதிவு சட்டப்படி உரிய சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டும், மேற்படி ஆவண எண்.6/2019 கூட்டுறவு சங்க சட்டத்தின் படி பதிவு செய்யப்படவில்லை என்றும், தற்போது 3ம் வாதி 1, 2 வாதிகளின் பாதுகாப்பில் வளர்ந்து வரும் நிலையில், மேற்படி சுவீகாரப்பத்திரம் (தத்தெடுப்பு ஆவணம்) படி 3ம்

வாதியை 1, 2ம் வாதிகள் தத்தெடுப்பு குழந்தையாக உத்தரவிட வேண்டி 1, 2ம் வாதிகளால் இவ்வழக்கானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>3) 1, 2ம் பிரதிவாதிகளின் எதிர்வழக்குரையின் சுருக்கம்</u>** :

வழக்கு 1, 2 பிரதிவாதிகள் கணவன் மனைவி என்றும், மேற்படி நபர்களுக்கு 2004ம் வருடம் பெரியவர்கள் முன்னிலையில் திருமணம் நடைபெற்று, தற்போது 3 குழந்தைகள் உள்ள நிலையில், மேற்படி குழந்தைகளில் ஒருவரான 3வது குழந்தை தான் வழக்கின் 3ம் வாதி என்றும், 1ம் வாதி சகோதரர் மற்றும், 2ம் வாதி சகோதரரின் மனைவி என்றும், மேற்படி தம்பதியருக்கு திருமணமாகி குழந்தைகள் இல்லாததாலும், 1, 2 வாதிகளிடம் 3வது வாதியை முழு மனதுடன் 1, 2 பிரதிவாதிகள் உறவினர்கள் முன்னிலையில் இந்து மத சடங்குப்படி இந்து மத சட்டப்படி 14.03.2019 அன்று உரிய முத்திரை கட்டணம் செலுத்தி மூலைக்கரைப்பட்டி சார்பதிவாளர் பதிவு அலுவலக எண்.6/2019 சுவீகாரபத்திரம் மூலம் தத்து கொடுத்துள்ளதாகவும், மேற்படி 3ம் வாதியான ஐஸ்வர்யா 1, 2 வாதிகளின் பாதுகாப்பில் இருந்து தற்போது பள்ளியில் படித்து வருவதாகவும், எனவே 1, 2 வாதிகள் 3ம் வாதியை தத்தெடுப்பு ஆவணம் மூலம் தத்தெடுத்துள்ளதால், 3ம் வாதியை 1, 2 வாதிகளின் தத்தெடுப்பு குழந்தையாக விளம்புகை செய்வதில் 1, 2 பிரதிவாதிகளுக்கு எவ்வித ஆட்சேபனையும் இல்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

**4)** வழக்குரை, எதிர்வழக்குரை மற்றும் ஆவணங்களின் அடிப்படையில் இந்நீதிமன்றம் கீழ்கண்ட எழுவினாக்களை வனைந்துள்ளது.

**<u>வழக்கெழு வினாக்கள்</u>**

1) Whether the plaintiffs are entitled for the declaration relief as prayed for in suit?

2) To what other relief?

5) வாதிகள் தரப்பில் 1ம் வாதி பேச்சிமுத்து என்பவர் வா.சா.1 ஆகவும், வழக்கிற்கு 3ம் நபரான ஜெயராஜ் என்பவர் வா.சா.2 ஆகவும் விசாரிக்கப்பட்டு,

வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.6 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. பிரதிவாதிகள் தரப்பில் 1ம் பிரதிவாதியான சுப்பிரமணியன் என்பவர் பி.சா.1 ஆக விசாரணை செய்யப்பட்டு சான்றாவணங்கள் குறியிடப்படவில்லை.

**6) <u>தீர்வு</u>**

**<u>எழுவினா 1 க்கான பரிசீலனையும் அதன் முடிவும்</u>:**

வாதிகள் தரப்பு வழக்கின் படி, வழக்கு 1, 2 வாதிகளுக்கு திருமணத்தின் பயனாக குழந்தைகள் இல்லை என்பதால், வழக்கு 1ம் பிரதிவாதிக்கும் 2ம் பிரதிவாதிக்கும் ஏற்பட்ட திருமண பந்தத்தின் பயனாக 01.04.2015ம் தேதி இவ்வழக்கின் 3ம் வாதியான மைனர் ஐஸ்வர்யா என்பவர் பிறந்துள்ள நிலையில், மேற்படி வழக்கில் 3ம் வாதி 1ம் வாதியின் சகோதரர் மகள் என்பதால், 1 மற்றும் 2ம் பிரதிவாதிகளிடம் 3ம் வாதியை தத்தெடுக்க கேட்டுக்கொண்டதால், 1, 2 ம் பிரதிவாதிகள் தங்களது 3வது பெண் குழந்தையான செல்வி ஐஸ்வர்யா என்பவரை இவ்வழக்கு 1, 2 வாதிகளுக்கு இந்து மத சடங்கு படியும் இந்து மத சட்டப்படியும் உறவினர்கள் முன்னிலையில் தத்து கொடுத்துள்ளதாகவும், மேற்படி பதிவு சட்டப்படி உரிய சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளதால், மேற்படி சுவீகாரப்பத்திரம் (தத்தெடுப்பு ஆவணம்) படி 3ம் வாதியை 1, 2ம் வாதிகள் தத்தெடுப்பு குழந்தையாக உத்தரவிட வேண்டி 1, 2ம் வாதிகளால் இவ்வழக்கானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**7)** வாதிகளுக்கு அவர்கள் கோரியுள்ள பரிகாரம் கிடைக்கக்கூடியதா என்பதை பரிசீலனை செய்கையில், 3ம் வாதியான செல்வி ஐஸ்வர்யா 1, 2 பிரதிவாதிகளின் இயற்கை குழந்தையாக இருந்து 1, 2 வாதிகளுக்கு சட்டத்தின் படி தத்து கொடுக்கப்பட்டார் என்பதை நிருபிக்கும் விதமாக, 1ம் வாதியான பேச்சிமுத்து என்பவர் வா.சா.1 ஆக முன்னிலையாகி சாட்சியம் அளித்து வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.6 வரையிலான ஆவணங்கள் தாக்கல் செய்து பிராதை அனுசரித்து

சாட்சியம் அளித்தும், வழக்கிற்கு 3ம் நபரான வா.சா.2 பிராதை அனுசரித்து சாட்சியம் அளித்து சான்றாவணங்கள் குறியீடு செய்யப்படவில்லை.

8) மேலும் வா.சா.ஆ.1 ஆவணத்தினை கூர்ந்துநோக்கும் போது, 14.03.2019 அன்று 1, 2 வாதிகள், 1, 2 பிரதிவாதிகளிடம் 3ம் வாதியை தத்து எடுத்துள்ளது தெரியவருகிறது. மேற்படி பத்திரத்தில் 1, 2 வாதிகள் 1, 2 பிரதிவாதிகளிடமிருந்து 3ம் வாதியை தத்து எடுத்துள்ளதும், அது பதிவு செய்யப்பட்டுள்ளதும் தெளிவாக தெரிகிறது. மேலும் 3ம் வாதியான ஐஸ்வர்யாவை தன் சொந்த குழந்தைபோல் பாவித்தும், மேலும் 1, 2 வாதிகளுக்கு பாத்தியப்பட்ட அசையும், அசையா சொத்துக்கள் அனைத்திற்கும் தத்து எடுக்கப்பட்ட பெண்குழந்தையே தான் வாரிசு தாரர் என்றும், மேற்படி சுவீகார மகளுக்கு தன் சொந்த பொறுப்பிலேயே திருமணம் போன்ற நற்காரியங்களை செய்ய வேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளதும் தெரியவருகிறது. மேலும் வா.சா.ஆ.2 ஆவணத்தினை பார்க்கும்போது, 3ம் வாதியான ஐஸ்வர்யா 01.04.2015 அன்று பிறந்துள்ளதும், மேற்படி நபரின் தந்தை சுப்பிரமணியன் என்றும், தாயார் சகுந்தலா என்றும் குறிப்பிட்டுள்ளது தெரியவருகிறது. மேலும் வா.சா.ஆ.3 முதல் வா.சா.ஆ.5 வரையிலான ஆவணங்களாக 1 முதல் 3 வாதிகளின் ஆதார் அட்டைகள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேலும் வா.சா.ஆ.6 ஆவணத்தை பார்க்கும் போது 1, 2 வாதிகளுக்கு 04.11.2004 அன்று திருமணமாகியுள்ளது தெரியவருகிறது.

9) வாதிகள் தாக்கல் செய்துள்ள வழக்கில் வாதிகள் கோரியுள்ள பரிகாரங்கள் வாதிகளுக்கு கிடைக்கக்கூடியதா என்று பார்க்கும் போது, வழக்கு வாதிகள் இந்து மதத்தை சார்ந்தவர் என்பதும், வழக்கு 1, 2 வாதிகளுக்கு குழந்தைகள் இல்லை என்பதால், 3ம் வாதியை சுவிகார குழந்தையாக தத்து எடுத்துள்ளது வா.சா.ஆ.1 ஆவணத்தின் மூலம் தெரியவருகிறது. இந்து தத்தெடுப்பு

மற்றும் பராமரிப்பு சட்டம் 1956ன் பிரிவு 16 கூறுவதாவது "Presumption as to registered documents relating to adoption. Whenever any document registered under any law for the time being in force is produced before any court purporting to record an adoption made and is signed by the person giving and the person taking the child in adoption, the court shall presume that the adoption has been made in compliance with the provisions of this Act unless and until it is disproved".

10) மேற்கூறிய சட்டஅனுமானம் வாதிகள் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.1 ஆவணத்தின் படி வாதிகளுக்கு கிடைக்கக்கூடியது என்றும், 3ம் வாதியின் இயற்கை பெற்றோர்களான 1, 2 பிரதிவாதிகளின் முழு சம்மதத்துடன் சுவிகார பத்திரம் ஏற்படுத்தி பதிவு செய்யப்பட்டுள்ளதாலும், மேற்படி நபர்களால் வா.சா.ஆ.1 ஆவணம் மறுக்கப்படாத காரணத்தினாலும், மேலும் 3ம் வாதியை 1, 2 வாதிகளின் தத்தெடுப்பு குழந்தையாக விளம்புகை செய்ய வாதிகளால் கோரப்பட்டுள்ளதை மறுத்து 3, 4 பிரதிவாதிகள் தரப்பில் நிருபிக்க முன்வராமல் ஒருதலைப்பட்சமாக்கப்பட்டுள்ளதாலும், வாதிகள் கோரியுள்ள பரிகாரங்கள் வாதிக்கு வழங்கத்தக்கது என்று எழுவினா 1ற்கு விடையளிக்கப்படுகிறது.

**<u>11) எழுவினா 2க்கான பரிசீலனையும் அதன் முடிவும்</u>** :

வாதிகளின் வழக்கை கவனமாக பரிசீலிக்கையில் வாதிகளின் வழக்கானது விளம்புகை பரிகாரத்தை மட்டுமே அடிப்படையாக வைத்து தாக்கல் செய்யப்பட்டுள்ளது. வாதிகள் வேறு குறிப்பான பரிகாரங்கள் ஏதும் கோரவில்லை. வாதிகள் கோரிய பரிகாரமானது வழங்கப்பட்டுள்ள நிலையில் வாதிகளுக்கு வேறு பரிகாரம் எதுவும் கிடைக்கத்தக்கதல்ல என்று இந்த எழுவினாவிற்கு விடையளிக்கப்படுகிறது. இரு தரப்பு வழக்கினையும் கருத்தில் கொண்டு அவரவர் செலவு தொகையை அவரவர் ஏற்றுக் கொள்ள உத்தரவிடப்படுகிறது.

**12) அ) இறுதியாக இவ்வழக்கு அனுமதிக்கப்பட்டு, தத்தெடுப்பு ஆவணம் (சுவிகார பத்திரம்) படி 3ம் வாதி, 1ம் மற்றும் 2ம் வாதிகளின் தத்தெடுப்பு குழந்தை என விளம்புகை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது.**

**ஆ) செலவுத்தொகை இல்லை என உத்தரவிடப்படுகிறது.**

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு. அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு. பின்னர் என்னால் பிழை திருத்தம் செய்யப்பட்டு. 2026ம் ஆண்டு மார்ச் திங்கள் 6ம் நாள் அவையறிய பகரப்பட்டது

MANJULA C
Digitally signed by MANJULA C
Date: 2026.03.08 22:03:13 -0800

**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**நாங்குநேரி**

**<u>விசாரிக்கப்பட்ட சாட்சிகளின் பட்டியல்:</u>**
**<u>வாதிகள் தரப்பில்;</u> :**

வா.சா.1 : பேச்சிமுத்து

வா.சா.2 : ஜெயராஜ்

**<u>பிரதிவாதிகள் தரப்பில்</u>**:

பி.சா.1 : சுப்பிரமணியன்

**<u>குறியிடப்பட்ட சான்றாவணங்களின் பட்டியல்</u>**

**<u>வாதிகள் தரப்பில்</u>** :

| Doc.No. | Date | Particulars of the documents |
|---|---|---|
| வா.சா.ஆ.1 | 14.03.2019 | தத்தெடுப்பு ஆவணம் அசல் |
| வா.சா.ஆ.2 | – | 3ம் வாதியின் பிறப்பு சான்றிதழ் அசல் |
| வா.சா.ஆ.3 | – | 1ம் வாதியின் ஆதார் அட்டை நகல் |
| வா.சா.ஆ.4 | – | 2ம் வாதியின் ஆதார் அட்டை நகல் |
| வா.சா.ஆ.5 | – | 3ம் வாதியின் ஆதார் அட்டை நகல் |
| வா.சா.ஆ.6 | – | 1, 2 வாதிகளின் திருமண அழைப்பிதழ் அசல் |

<u>பிரதிவாதிகள் தரப்பில்</u> **: தாக்கல் இல்லை**

<u>சாட்சி தரப்பு சான்றாவணம்</u>**: இல்லை**

MANJULA C
Digitally signed by MANJULA C
Date: 2026.03.08 22:03:18 -0800

**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**நாங்குநேரி**